செய்தி வெளியீடு எண்:562 நாள் : 07.11.2014

## மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110–ன் கீழ் அறிவிக்கப்பட்ட செய்தித் துறை மற்றும் எழுதுபொருள் அச்சுத்துறை அறிப்புகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலை குறித்த ஆய்வுக் கூட்டம்

## மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.கே.டி. ராஜேந்திரபாலாஜி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

---

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110–ன் கீழ் அறிவிக்கப்பட்ட செய்தித் துறை மற்றும் எழுதுபொருள் அச்சுத் துறை அறிப்புகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதை நிலை குறித்த ஆய்வுக் கூட்டம் இன்று (07.11.2014) தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.கே.டி. ராஜேந்திரபாலாஜி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

மக்கள் நலன் காக்கும் மக்கள் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் எழை, எளிய மக்களின் நலன் கருதி எண்ணற்ற திட்டங்கள் அறிவிக்கப்பட்டு, சிறந்த முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றத்தில் விதி 110–ன் கீழ் பல்வேறு அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அனைத்து அறிப்புகளையும் முழுமையாக நிறைவேற்றிட துறை அலுவலர்கள் முனைப்புடன் செயலாற்ற வேண்டும். செய்தித் துறையின் செயல்பாடுகளை தீவிரப்படுத்த உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட செய்தித் துறை மற்றும் எழுதுபொருள் அச்சுத் துறைகளுக்கு அனைத்துத் திட்டப் பயன்களையும் மக்களுக்கு கொண்டு சேர்ப்பதில், செய்தித் துறை அலுவலர்களின் ஈடுபாடு மிகவும் முக்கியமானதாகும். அதற்கேற்ற வகையில் செய்தித் துறை அலுவலர்கள் கடமை உணர்வோடும், பொறுப்போடும் செயலாற்ற வேண்டும்.

நினைவகங்களை தூய்மையாக தொடர்ந்து பராமரித்துவர அலுவலர்கள் உரிய நடவடிக்கை எடுப்பதுடன், தொடர்ந்து கண்காணித்து வரவேண்டும். மேலும், துறையில் நிரப்பப்படாத

பணியியிங்களை நிரப்பவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.கே.டி. ராஜேந்திரபாலாஜி அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், செய்தி வெளியீட்டுப் பிரிவு, மேற்கோள் பிரிவு, நினைவகங்கள், பொருட்காட்சிப் பிரிவு, தமிழரசு அலுவலகம், தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம் மற்றும் எழுதுபொருள் அச்சுத் துறை அச்சகம் போன்ற பல்வேறு பிரிவுகளின் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைவுபடுத்துமாறு அறிவுரை வழங்கினார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் மூ. இராசாராம், இ.ஆ.ப.,. செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., எழுதுபொருள் அச்சுத் துறை இயக்குநர் திரு.ஜெ.ஜெயகாந்தன், இ.ஆ.ப., கூடுதல் இயக்குநர்கள் திரு. தங்க. புகழேந்தி, திரு. எஸ்.பி. எழிலழகன், இணை இயக்குநர்கள் திரு. கு. தாணப்பா, திருமதி டி.ஆர். ஜெயஸ்ரீ, திரு. உல. ரவீந்திரன், துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், பிரிவு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

-----

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**